# டிசம்பர் – 15 – சனி

**புனித ஜெஸ்மின் மக்குயின்**

**“நாங்கள் விடுதலை பெறுமாறு உம் முக ஒளியைக் காட்டியருளும்” (தி.பா.80:19)**

-----------------------------------------------------------------

## முதல் வாசகம் : : சீராக் 48 : 1 – 4, 9 – 11

இறைவாக்கினர் எலியா நெருப்புபோல எழுந்தார் தீவட்டிபோல் அவருடைய சொல் பற்றியெரிந்தது. மக்கள் மீது பஞ்சம் வரச் செய்தார் தம் பற்றார்வத்தால் அவர்களை எண்ணிக்கையில் சிலராக்கினார். ஆண்டவருடைய சொல்லால் வானம் பொழிவதை நிறுத்தினார் மும்முறை நெருப்பு விழச் செய்தார். எலியாவே, உம்முடைய வியத்தகு செயல்களில் நீர் எத்துணை மாட்சிக்குரியவர்! உமக்கு இணையாய் யார் பெருமை பாராட்டக்கூடும்? தீச்சூறாவளியில் நெருப்புக் குதிரைகள் பூட்டிய தேரில் நீர் எடுத்துக்கொள்ளப்பட்டீர். ஆண்டவருடைய சினம் சீற்றமாய் மாறுமுன் அதைத் தணிப்பதற்கும் தந்தையின் உள்ளத்தை மகனை நோக்கித் திருப்புவதற்கும் யாக்கோபின் குலங்களை மீண்டும் நிலைநிறுத்துவதற்கும் குறித்த காலங்களில் நீர் கடிந்து கொள்வீர் என்று எழுதப்பட்டுள்ளது. உம்மைக் கண்டவர்களும் உமது அன்பில் துயில் கொண்டவர்களும் பேறுபெற்றோர். நாமும் வாழ்வது உறுதி.

**பதில்பாடல் :** கடவுளே உமது முக ஒளியைக் காட்டி என்னை மீட்டருளும்

## நற்செய்தி : மத்தேயு 17 : 9 – 13

அவர்கள் மலையிலிருந்து இறங்கிவந்தபோது இயேசு, ”மானிட மகன் இறந்து உயிருடன் எழுப்பப்படும்வரை இக்காட்சியைப்பற்றி எவருக்கும் சொல்லக்கூடாது” என அவர்களுக்குக் கட்டளை யிட்டார். அப்பொழுது சீடர்கள் அவரிடம், ”எலியாதான் முதலில் வரவேண்டும் என்று மறைநூல் அறிஞர்கள் கூறுகிறார்களே, அது எப்படி?” என்று கேட்டார்கள். அவர் மறுமொழியாக, ”எலியா வந்து எல்லாவற்றையும் சீர்ப்படுத்தப் போகிறார் என்று கூறுவது உண்மையே. ஆனால் நான் உங்களுக்குச் சொல்கிறேன் ”எலியா ஏற்கெனவே வந்துவிட்டார். அவரை மக்கள் கண்டுணரவில்லை. மாறாக, தாங்கள் விரும்பியவாறெல்லாம் அவருக்குச் செய்தார்கள். அவ்வாறே மானிட மகனையும் அவர்கள் துன்புறுத்துவார்கள்” என்றார். திருமுழுக்கு யோவானைப் பற்றியே அவர் தங்களோடு பேசினார் என்பதை அப்பொழுது சீடர்கள் புரிந்து கொண்டார்கள்.

**தியானம்:** நமது கிறிஸ்தவ வாழ்வில் நம்பிக்கை உணர்வும், அதன் வழியாக மனமாற்றமும் எம்மில் ஏற்பட வேண்டும் என்பதை இன்றைய வாசகங்கள் வலியுறுத்துகின்றன. முதல் வாசகத்தில் பார்ப்பது போன்று எலியா ஆண்டவர் வழியை அயத்தப்படுத்தி மேன்மையடைந்தவர், இயேசுவின் முன்னோடியாகத் திகழ்ந்தவர், அபரீதமான ஆன்மீக வல்லமையுடையவராய் இருந்தார். திருவருகைக்கான ஆயத்தங்களில் உள்ள நாம் கடவுளின் அன்புறவில் வாழ்பவர் மரிப்பதில்லை என சீராக் கூறும் கருத்தில் நம்பிக்கை வைக்க அழைக்கப்பட்டுள்ளோம். இந்த நம்பிக்கையை நற்செய்தி வெளிப்படுத்தி நிற்கிறதை நாம் காண்கிறோம். சீடர்கள் இயேசுவிடம் எலியாதான் முதலில் வரவேண்டும் என்று மறைநூல் அறிஞர்கள் கூறுகிறார்களே அது எப்படி? என்று கேட்கிறார்கள். அதற்கு இயேசு “எலியா ஏற்கனவே வந்துவிட்டார்” ஆனால் மக்கள் அவரை இனங்கண்டுகொள்ளவில்லை. அவ்வாறே தன்னையும் கொல்வார்கள் என்பதை மறைமுகமாகக் கூறுகிறார் நாமும் இயேசுவின் திருவருகையினை வெளி ஆடம்பரங்களோடு மட்டும் நிறுத்திக் கொள்கிறோம். நம்மிடம் வாசம்செய்ய வரும் இயசுவின் திருவருகையின் முக்கியத்துவத்தை புரிந்துகொள்ளாதது ஏன்? சிந்திப்போம்.